Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 16

திங்கட்கிழமை 12 டிசெம்பர் 2022

கார்த்திகை 26 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

## அரசியல் தீர்வுக்காக சர்வகட்சிக் கூட்டம்!

### ஜனாதிபதி ரணில் அறிவிப்பு



கொழும்பு, டிசெ. 12
தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணும் நோக்குடன் பேச்சை ஆரம்பிப்பது தொடர்பில் கலந்துரையாட நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். இந்தக் கூட்டம் »11

## ஒற்றையாட்சியைக் கைவிடாவிடின் சர்வகட்சிக் கூட்டத்துக்கு செல்லோம்

### கஜேந்திரன் உறுதி

கொழும்பு, டிசெ. 12
இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் நாளை நடைபெறும் சர்வகட்சிக் கூட்டத்துக்குத் தமது கட்சி செல்லாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் செல்வராஜா கஜேந்திரன் »11

## சங்கக்கடைக்கு விஷமிகள் தீ!

யாழ்., டிசெ. 12
இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் (இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்துக்கு அருகில்) இயங்கிவரும் தெல்லிப் »11

## தமிழர் விவகாரத்தைக் கையாள தனியானதொரு செயலகம்!

யாழ்ப்பாணம், டிசெம்பர் 12

இலங்கை அரசாங்கத்துடனான பேச்சு உள்ளிட்ட தமிழர் தரப்பின் அரசியல் முன்னெடுப்புகளையும், இதர விடயங்களையும் கையாள்வதற்காக, தமிழ்த் தேசியக் கட்சிகளையும், துறைசார் நிபுணத்துவம் கொண்டோரையும் உள்ளடக்கியவகையில் தனியானதொரு செயலகத்தை அமைப்பதற்கு உடன்பாடு காணப்பட்டுள்ளது. »10

## ரணிலின் சர்வகட்சி கூட்டத்தில் தமிழ் தரப்பின் வியூகம் என்ன?

யாழ்ப்பாணம், டிசெ. 12
இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டு நாளை நடைபெறும் சர்வகட்சிக் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கட்சிகள் ஏற்கனவே பேசி முடிவெடுத்த மூன்று விடயங்களையும் சுதந்திர தினத்துக்கு முன்னதாக நடைமுறைப்படுத்த வலியுறுத்தப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்தார். »11

### கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள்

## தேர்தலை தனித்தனியாக எதிர்கொள்ளத் திட்டம்

கொழும்பு, டிசெ. 12
இனிவரும் தேர்தல்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிகள் தனித்தனியாக முகம் கொடுப்பது தொடர்பான விடயங்கள் தொழில்நுட்ப ரீதியில் ஆராயப்பட்டுள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். »11

## இளைஞருக்கு கத்திக்குத்து!

### பளையில் சம்பவம்

கிளிநொச்சி, டிசெ. 12
பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வண்ணாங்கேணிப் பகுதியில் நேற்றுமுன்தினம் கத்திக்குத்துக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் »11

## இந்திய மத்தியஸ்தத்துடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு

### ரணிலிடம் வலியுறுத்துவேன் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 12
அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உண்மையான அக்கறையுடன் இருப்பாரானால், இந்திய மத்தியஸ்தத்துடன் பேச்சை ஆரம்பிப்பதற்கு அவர் இணங்கவேண்டும். இதனை நான் நாளைய சந்திப்பில் வலியுறுத்துவேன் »10

## 3 வயதுக் குழந்தை மீது பாலியல் துஷ்பிரயோகம்

### போதைக்கு அடிமையான தந்தை கைது

யாழ்ப்பாணம், டிசெ. 12
பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், மூன்று வயது பெண் குழந்தையைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில், »11

## மீண்டும் சஜித்

கொழும்பு, டிசெ. 12
ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பிரேமதாஸ நேற்று மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் வரு »11

## உள்ளாட்சித் தேர்தல்: ஆணை வழங்குங்கள்!

### மக்களிடம் சஜித் கோரிக்கை



கொழும்பு, டிசெ. 12
உள்ளாட்சிசபைத் தேர்தல் விரைவில் வருகிறது. நாட்டை மீட்கக்கூடிய ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆணை வழங்கி, எமது வெற்றிப் பயணத்தை மக்கள் ஆரம்பித்து வைக்கவேண்டும்' - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ அறைகூவல் விடுத்தார். »11

## தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்.ஆதீனத்துக்குப் புதிய பேராயர்



யாழ்ப்பாணம், டிசெ. 12
தென்னிந்தியத் திருச்சபையின் யாழ் ஆதீனத்தின் புதிய பேராயராக வண. அருட்கலாநிதி வே.பத்மதயாளன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர், கடந்த வெள்ளிக்கிழமை இந்திய தலைமை ஆதீனத்தால் தெரிவு செய்யப்பட்டார். »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைகளை அடகு வைத்து வாழ்க்கை நடத்தும் மக்கள்!

## இந்தாண்டு 20,000 கோடி ரூபா நகைகள் அடகுவைப்பு

கொழும்பு, டிசெ. 12
பொருளாதார நெருக்கடி காரணமாக மாற்றுவழியின்றி இந்தாண்டு சுமார் 20 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகளை மக்கள் அடகு வைத்து பணம் பெற்றுள்ளனர் என ஆய்வொன்றில் தெரிவிக்கப்படுகிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதார அறிவியல் மற்றும் தொகை மதிப்பு திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரள உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்ட ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. நடுத்தர மக்களே அதிகளவில் தமது தங்க ஆபரணங்களை அடகு வைத்துப் பணத்தைப் பெற்றுள்ளனர்.

இந்த வருடத்தின் முதல் 10 மாதங்களில் 13 அனுமதிப்பெற்ற வணிக வங்கிகள், 10 நகை அடகு பிடிக்கும் நிறுவனங்களிடம் 19 ஆயிரத்து 300 கோடி ரூபாவுக்கு மக்கள் தமது தங்க ஆபரணங்களை அடகு வைத்துள்ளனர். தமது பிள்ளைகளின் கல்வி மற்றும் கமத்தொழில் நடவடிக்கைகளுக்காக மக்கள் இவ்வாறு பணத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என பேராசிரியர் வசந்த அத்துகோரள சுட்டிக்காட்டினார். (ச-இ)

## தரம் குறைந்த கோதுமை மா சந்தையில்

கொழும்பு, டிசெ.12
சந்தையில் தரம் குறைந்த கோதுமை மா விற்பனை செய்யப்படுகின்றது என்று வெதுப்பக உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கோதுமை மாவின் விலை தொடர்பாகப் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. கோதுமை மாவின் மொத்த விலை குறைக்கப்பட்டுள்ளபோதும், சில்லறை விற்பனை நிலையங்களில் விலைகள் குறைக்கப்படவில்லை.

அதேநேரம் வெதுப்பக உற்பத்திப் பொருள்களின் விலைகளும் குறைக்கப்படாதுள்ளன. சந்தையில் குறைந்த விலையில் கிடைக்கின்ற கோதுமை மா தரம் குறைந்தது- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## சிவனொளிபாத யாத்திரை விசேட சோதனை

யாழ்ப்பாணம், டிசெ. 12
சிவனொளிபாதமலை யாத்திரையின்போது போதைப்பொருள் விநியோகம் இடம்பெறுவதைத் தடுக்கும் முகமாக மோப்ப நாயின் உதவியுடன் விசேட சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என ஹற்றன் பொலிஸ் பிரிவின் இலஞ்ச ஒழிப்புப் பிரிவு தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் சிவனொளிபாத மலைக்குச் சென்ற பஸ்கள் மற்றும் பிறவாகனங்கள் சோதனையிடப்பட்டன என்றும் கஞ்சா மற்றும் சட்டவிரோதமான முறையில் புகைத்தல் பொருள்களை வைத்திருந்த 3 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-22)

## மஹிந்தவின் முடிவால் அதிர்ச்சியில் பெரமுன

கொழும்பு, டிசெ.12
பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்களுக்கு உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வேட்புமனுக்களை வழங்கவேண்டாம் என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ச பொதுஜன பெரமுனவுக்கு அறிவித்துள்ளமை கட்சிக்குள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களிடம் விண்ணப்பங்களைக் கோருவதற்கு பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதால், பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

இந்த விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும்போது, விண்ணப்பிப்பவர் அரசியலில் கிராமமக்களுடன் இணைந்து நடைமுறையில் செயற்பட்டுள்ளாரா? என்பதுடன் கல்வியிலும் முதன்மை கவனம் செலுத்த வேண்டும் என்று மஹிந்த அறிவித்துள்ளார்.

இந்த விடயங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச கட்சித் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

மஹிந்தவை சுற்றியிருப்பவர்கள் அனைவரும் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்குள்ளானவர்கள் என்பதனால் உறுப்பினர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். இந்த உறுப்பினர்கள் அனைவரும் மஹிந்தவுடன் அனைத்துக் காலப்பகுதியிலும் இணைந்து செயற்பட்டவர்கள் எனக் கூறப்படுகின்றது.

எதிர்வரும் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் திறமையான இளம் பிரதிநிதிகளை முன்வைப்பதில் அதிக கவனம் செலுத்த பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது. பொதுஜன பெரமுன உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான விண்ணப்பங்களைத் தனித்தனியாக ஆராயவும் தீர்மானித்துள்ளது. (எ-இ)



## புலம்பெயர் தொழிலாளர்களால் 3 பில்லியன் டொலர் வருமானம்!

கொழும்பு, டிசெ. 12
புலம்பெயர் தொழிலாளர்களால் இந்த ஆண்டு நாட்டுக்கு சுமார் 3 பில்லியன் அமெரிக்க டொலர் அனுப்பப்பட்டுள்ளது என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதத்தில் நாட்டுக்கு அனுப்பப்பட்ட தொகை 384.4 மில்லியன் அமெரிக்க டொலராகும். ஒக்ரோபர் மாதத்தில் புலம்பெயர் தொழிலாளர்களால் நாட்டுக்கு 355.4 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைத்துள்ளது.

ஒக்ரோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்தத் தொகை 30 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமாகும்.

கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 42 வீதம் அல்லது 113 மில்லியன் அமெரிக்க டொலர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். (ச-இ)

## விபத்தில் ஓட்டோ சாரதி உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 12
கார்- ஓட்டோ விபத்தில் ஓட்டோ சாரதி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு - கொள்ளுப்பிட்டியில் இந்த விபத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வீதியில் பயணித்த காரொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து முன்பாக சென்ற ஓட்டோவுடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்தது.

விபத்தில் படுகாயமடைந்த ஓட்டோ சாரதி கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டநிலையில் உயிரிழந்தார் எனவும் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் இரண்டு பெண்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-22)

## பாடசாலை விடுமுறை குறைக்கத் தீர்மானம்



கொழும்பு, டிசெ. 12
பாடசாலை விடுமுறை நாள்களைக் குறைப்பது தொடர்பில் கல்வியமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

அடுத்த வருடம் பாடசாலை விடுமுறையைக் குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஒரு வருடத்தில் சராசரியாக 210 நாள்கள் பாடசாலைகள் நடத்தப்படவேண்டும். அதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்படும். அடுத்த வருடம் டிசெம்பர் மாதத்துக்குள் அனைத்துத் தரங்களுக்குமான பாடத்திட்டங்களையும் உள்ளடக்குவதே இதன் இலக்காகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## 4 மாகாணங்களுக்கு புதிய ஆளுநர்கள்!

கொழும்பு, டிசெ.12
நான்கு மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் அடுத்த வாரம் நியமிக்கப்படலாம் என்று அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நியமிக்கப்படவுள்ள நான்கு ஆளுநர்களில் மூன்று பேர் முன்னாள் அமைச்சர்கள் எனவும் ஒருவர் முன்னாள் ஆளுநர் எனவும் கூறப்படுகிறது.

9 மாகாணங்களில் ஏனைய 5 மாகாண ஆளுநர் பதவிகளில் எந்தமாற்றங்களையும் செய்வதில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதியுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டுள்ளது என்று கூறப்படுகிறது.

ஏனைய நான்கு மாகாணங்களுக்கு நியமிக்கப்படவுள்ள புதிய ஆளுநர்களின் பெயர் விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் ஆளுநர்களாக நியமிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நோயுற்றவனுக்கே மருத்துவம்

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் பேச்சு நடத்துவதற்கு சர்வ கட்சிக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ், முஸ்லிம் மற்றும் பெரும்பான்மையினக் கட்சிகளுடன் நாளை மாலை ஜனாதிபதி செயலகத்தில் இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெறவிருப்பது உறுதியாகியிருக்கின்றது. கூடவே, 'சிங்களப் பேரினவாத சிந்தாந்தத்தைத்' தாண்டிய வகையில் தீர்வென்ற ஒன்று கண்டுகொள்ளப்படாது என்பதும் மெய்ப்பிதமாகியிருக்கின்றது.

சுதந்திர தினத்துக்குள் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று ரணில் கடந்த இரு மாதங்களுக்குள் ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் வலியுறுத்தியிருந்தார். அனைவரும் ஏற்கும்படியான தீர்வாக அது அமையும் என்றும் அவர் தெரிவித்திருந்தார். 70 ஆண்டு கால அரசியலால் 30 ஆண்டுகால ஆயுதப்போராட்டத்தால் காணப்படமுடியாத 'அனைவரும் ஏற்கும்படியான தீர்வை' எவ்வாறு ரணில் வெறும் மூன்றே மாதங்களில் காணப்போகின்றார் என்பது இருண்மை பொதிந்த விடயமாக மட்டுமே இருந்தது. அதிலும் 'இராஜதந்திர நகர்வுகளிலும்' சகுனியாட்டத்திலும் கரைகண்ட ரணில் இந்தக் கருத்தை வெளிப்படுத்தியமையானது பல்வேறுபட்ட ஐயப்பாடுகளையும் ஏற்படுத்தியது. இந்த ஐயப்பாடுகளின் பின்னரான நிதர்சனமாகவே நாளை ஏற்பாடாகியிருக்கும் சர்வகட்சிக் கூட்டம் அமையப்போகின்றது.

ஒரு பல்லின சமூகம் வாழும் தேசத்தில், மக்களினங்களுக்கு ஏற்ப அரசியலும் வேறுபடும். அந்த அரசியல் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகவும்கூட இருக்கும். சிரியா, சேர்பியா, உக்ரைன், துருக்கி என்று நீண்டு செல்லும் இந்தப் பட்டியலில் முக்கியமான இடத்தில் இருக்கின்றது இலங்கை. ஆதலால், இனங்களின் அரசியலைப் பொதுமைப்படுத்தப்பட முன்னர், பிரச்சினை எதுவோ அதை நிவர்த்தி செய்யவேண்டியது காலத்தின் கட்டாயமும் கடமையுமாகும். அதைவிடுத்துப் பொத்தாம்பொதுவான முடிவுகளை – திட்டங்களை – தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதன்றி வேறென்ன?


'அனைவரும் ஏற்கும்படியான தீர்வை' வழங்கவேண்டும் என்ற பெருவிருப்பு ரணிலின் இதயத்தில் இருப்பது உண்மையானால், அவர் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் முதலில் பேச்சு நடத்தியிருக்கவேண்டும். இதர சிறுபான்மைக் கட்சிகளுடன் இரண்டாம்கட்டப் பேச்சுக்குச் சென்றிருக்கவேண்டும். காயத்தை ஏற்படுத்தியவனையும் காயமுற்றவனையும் சமநேரத்தில் ஒரே மேசையில் அமர்த்திப் பேசுவதென்பது பிரச்சினைக்கான தீர்வாகத் தெரியலாம். ஆனால், அந்தப் பேச்சு எவ்வளவுதூரம் வெற்றியளிக்கும் என்பது யதார்த்தமுரண். இங்கே செய்ய வேண்டியது காயமுற்றவனுக்கு முதலில் மருந்திடுவது, அதைச் செய்வதற்கு ரணில் தவறியிருக்கின்றார்.

ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் தயாராகவே இருந்ததுடன், சமஷ்டியை முதன்மைப்படுத்திய தீர்வு உள்ளிட்ட மூன்று விடயங்களை ஜனாதிபதியுடனான சந்திப்பில் வலியுறுத்துவது என்று கொள்கையளவில் உடன்பட்டும் இருந்தன. ஆனால், சமஷ்டி என்ற சொல் 'சிலுவையைக் கண்ட பேயாட்டம்'தான் தென்னிலங்கைத் தலைவர்களுக்குத் தெரிகின்றது. சஜித்தும் இதற்கு விலக்கல்லர். ஆதலால், தனது தீர்வு முயற்சியின் முடிவு தன்னில் தங்கியதல்ல என்ற தகவலை சர்வதேசத்துக்குச் சொல்லாமல் சொல்வதற்குத்தான் ரணில் நாளைய சர்வகட்சிக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருக்கின்றாரா? என்ற நியாயமான சந்தேகங்கள் இங்கு எழவே செய்கின்றன.

'நோயற்றவனுக்கல்ல: நோயுற்றவனுக்கே மருத்துவர் தேவை' என்ற ஒரு சொல் கத்தோலிக்கர்களின் புனித நூலான வேதாகமத்தில் இருக்கின்றது. நோயற்றவர்களுக்கு மருந்திட எத்தனிக்கும் ரணில், இந்தக் கருத்தின் ஆழ்ந்த அர்த்தத்தைப் புரிந்துகொள்வது அவசியம்.

### நாளொரு நல்வார்த்தை

"வெற்றி பெற்றவர்களின் கதைகள் உங்களுக்கு வெறும் தகவல்களை மட்டுமே அளிக்கும். தோல்வி அடைந்தவர்களின் கதை தான் வெற்றி பெறுவதற்கான வழிகளைச் சொல்லும்." - அப்துல்கலாம்



## ஐ.எம்.எப். கடன் தாமதம் கையேந்தும் இலங்கை

கொழும்பு, டிசெ. 12

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதிகளுக்கான அனுமதி கிடைக்கும் வரை ஏனைய நாடுகளிடமிருந்து குறுகிய காலத்துக்குக் கடனுதவிகளைப் பெற எதிர்பார்க்கப்பட்டுள்ளது என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியா, ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் நிதியுதவிகளை வழங்கும் ஏனைய நிறுவனங்களிடம் இலங்கை 850 மில்லியன் டொலர் கடனுதவியைப் பெற எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் சர்வதேச அபிவிருத்திப் பங்காளிகள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களுடன் அரசாங்கம் ஏற்கனவே 8 உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டு 1.87 பில்லியன் அமெரிக்க டொலர் கடனாகப் பெற்றது.

அடுத்த ஆண்டுக்கான வெளிநாட்டு நிதி திரட்டுவதை அவசர விடயமாகக் கருதி இந்த இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்படுகின்றன என்றும், இதற்கென சம்பந்தப்பட்ட நாடுகளுடன் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெயான் சேமசிங்க தெரிவித்தார். (ச-இ)

## ஆள்கடத்தல் சம்பவங்கள் ஓமானுக்கு விசாரணைக் குழு

கொழும்பு, டிசெ.12

ஆள்கடத்தல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளுக்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று ஓமான் சென்றுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நாள்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய ஓமானுக்கான ஆள்கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் பணிப்புரையின் பேரில் இந்தக் குழு நேற்றுமுன்தினம் புறப்பட்டுச் சென்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மேலதிக பொது முகாமையாளர், மூன்று விசாரணை அதிகாரிகள் மற்றும் ஒரு பொலிஸ் பரிசோதகர் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஒரு பெண் உப பொலிஸ் பரிசோதகர் ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர்.

இதேவேளை- வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்தை மீறி வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டவர்கள் தொடர்பில் அண்மைய நாள்களில் பதிவாகிய சம்பவங்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது. (எ-இ)

**நாளை**

13.12.2022
செவ்வாய்க்கிழமை
கார்த்திகை 27

சுபநேரம் : 10.50 – 12.20
ராகுகாலம் : 03.20 –04.50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொடுப்பதே இலக்கு

## ம.உ. ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ.12

மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதே இந்த வருடத்துக்கான எமது கருப்பொருளாக இருக்கின்றது. ஆனால், அங்கவீனர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், போரில் பாதிக்கப்பட்டவர்கள், சிறுவர்கள் மற்றும் பெருந்தோட்டத்துறையினர் உள்ளிட்டவர்களின் உரிமைக்காக அவர்களால்கூட குரல் கொடுக்க முடியாத நிலைமையே தற்போது காணப்படுகின்றது என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு யாழிலுள்ள கியூடெக்கில் “அனைவருக்கும் கௌரவம், சுதந்திரம் மற்றும் நீதி” என்னும் தொனிப்பொருளிலான நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மனித உரிமை தினத்தின் முக்கியத்துவம் 1948 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் அனைத்துலக மனித உரிமை பிரகடனமாக நிறைவேற்றப்பட்டது. சகல மக்களையும் ஒன்றிணைப்பதே மனித உரிமை. சகல உயிரினங்களும் சமமானவை என்ற அடிப்படையில் அந்த உரிமைகளை அங்கீகரித்தே சர்வதேச மனித உரிமை தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

அந்த வகையில் இந்த வருடத்துக்கான தொனிப்பொருள் கௌரவம், சுதந்திரம், நீதி என்பன முக்கியமானவையாகும். ஒதுக்கப்பட்ட சமூகமானது அவர்களது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில் பல சவால்கள் இருக்கின்றன. அங்கவீனர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், போரால் பாதிக்கப்பட்டவர்கள், சிறுவர்கள் மற்றும் பெருந்தோட்டத்துறையினர் உள்ளிட்டவர்களின் உரிமைக்காக அவர்களால்கூட குரல் கொடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

அரசாங்கத்துடன் சிவில் சமூகம் உள்ளிட்டவை அனைத்தும் இணைந்து மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பது என்பதை இந்த வருடத்துக்கான கருப்பொருளாக எடுத்துக்கொள்ள வேண்டும் - என்றார். (ஏ-14-27)

# மனித உரிமையை மதிக்கும்வரை நாடு மீட்சியுற வாய்ப்பே இல்லை!

## இரா.சாணக்கியன் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 12

இலங்கை மனித உரிமைகளை மதிக்காத நாடாக இருக்கும் வரைக்கும் பொருளாதாரத்தை ஒருநாளும் கட்டியெழுப்பமுடியாது என்பதை தெற்கு மக்களும் ஆட்சியாளர்களும் உணரவேண்டும். அதை உணராவிட்டால் இந்த நாட்டுக்கு எதிர்காலமில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தால் நீதி கோரி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் சிங்கள மக்களுக்கு எதிராகப் போராடவில்லை. தமிழ்மக்களுக்கு நடந்த அநீதிக்கு நீதி கேட்டே ஆட்சியாளர்களுக்கு எதிராக நாங்கள் போராடுகின்றோம். மனித உரிமைகள் பலவற்றை மீறிய நாடாக இலங்கை காணப்படுகிறது. 1948 ஆம் ஆண்டிலிருந்து மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தவண்ணமேயுள்ளன.

அண்மைக்காலங்களில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக ஜனாஸா எரிப்பு போன்ற மனித உரிமை மீறல்கள் கூட இடம்பெற்றன. அத்துடன் தெற்கில் போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் வன்முறைகளை மேற்கொண்டு மனித உரிமை மீறல்களை அரங்கேற்றின. இவையெல்லாம் வடக்கு - கிழக்கில் நாள்தோறும் அரங்கேறும் சர்வசாதாரண விடயங்களாகும்.

மனித உரிமையை மதிக்கும் நாடாக இலங்கை மாறும் வரைக்கும் இந்த நாட்டுக்கு எதிர்காலம் இல்லை.

மனிதனுக்கே மதிப்பில்லை என்றால் அவ்வாறான நாடு எவ்வாறு ஒரு ஜனநாயக வழியில் பொருளாதார வழியில் அபிவிருத்தியடைய முடியும் என்பதைப் பெரும்பான்மை சமூகம் உணரவேண்டும் - என்றார். (ச-22)




# மனித உரிமைகள் தினம் மன்னாரில் கடைப்பிடிப்பு

மன்னார், டிசெ. 12

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு “மனித உரிமைகள் ஒவ்வொருவரினதும் உரிமைகள்” என்ற தொனிப்பொருளில் சர்வதேச மனித உரிமைகள் தினம் மன்னாரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில், இளைஞர், யுவதிகள் சைக்கிள் பவனியாகவும் வாகனத்திலும் பதாகைகள் ஏந்தியவாறு மன்னார் நகரின் பிரதான பாதைகள் ஊடாக முருங்கன் மற்றும் நானாட்டான் பகுதிகளுக்குச் சென்று மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை மேற்கொண்டனர்.

“எங்கள் உரிமையே எங்கள் சுதந்திரம்”, “பேச்சு சுதந்திரம் கல்விக்கான உரிமை” மற்றும் “சமூக பாதுகாப்புக்கான உரிமை”, “உலகில் உள்ள யாவருக்கும் உரிமைகள் சமமமே” போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு விழிப்புணர்வை மேற்கொண்டனர். மனித உரிமைகள் தொடர்பான கையேடுகளும் விநியோகிக்கப்பட்டன. (ஏ-14-60)



# அம்மாச்சி உணவகத்தை இயங்க வைக்க கோரிக்கை

மன்னார், டிசெ.12

மன்னார், நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் இயங்காதுள்ள அம்மாச்சி உணவகத்தை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அம்மாச்சி உணவகம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் சீராக இயங்கி வந்தது. வறுமைக் கோட்டின் கீழுள்ள பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பத்தினர் மற்றும் பெண் சுய தொழில் முயற்சியாளர்கள் இதன்மூலம் வருமானம் பெற்றனர்.

தற்போது இந்த உணவகம் கைவிடப்பட்டு பாழடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இந்த உணவகத்தை மீண்டும் இயங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட மற்றும் பெண் சுயதொழில் முயற்சியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (ஏ-213)

# மனித உரிமைகள் தொடர்பில் விழிப்புணர்வை வழங்குங்கள்

## சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரணி தெரிவிப்பு

சட்டத்தரணிகள், கற்றறிந்தவர்கள், சமூக ஆர்வலர்கள் அனைவரும் சாதாரண மக்களுக்கு மனித உரிமை என்றால் என்ன? மனித உரிமை மீறப்பட்டால் நாம் என்ன செய்யவேண்டும் என்பது தொடர்பான விழிப்புணர்வை வழங்கவேண்டுமென்று சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்டத்தரணி றொபின்ஷா நக்கீரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கியூடெக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

டிசெம்பர் 10 ஆம் திகதி மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுகின்றது. இந்த மனித உரிமைகள் கொண்டாடப்படுவதன் அவசியம் நாம் அனைவரும் அறிந்த ஒன்றே.

இலங்கையில் ஏற்பட்ட மனித உரிமை மீறல் தொடர்பில் நாம் அனைவரும் அறிந்த போதும் அது தொடர்பில் எந்தவிதக் காத்திரமான எதிர்ப்பையும் காட்ட முடியாத நிலையில் நாம் அனைவரும் காணப்படுகின்றோம். மனித உரிமை என்றால் என்ன? மனித உரிமை மீறப்பட்டால் நாம் என்ன செய்யவேண்டும் என்பது தொடர்பில் சாதாரணமாக கற்றதரப்பினர் மத்தியில் மட்டும் மனித உரிமைகள் விழிப்புணர்வு காணப்படாமல், சாதாரண மக்களிடத்திலும் இந்த விழிப்புணர்வு காணப்பட வேண்டும்.

சட்டத்தரணிகள், கற்றறிந்தவர்கள், சமூக ஆர்வலர்கள் அனைவரும் சாதாரண மக்களுக்கும் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை வழங்கவேண்டும். அவ்வாறு வழங்கினால் தமிழ்பேசும் மக்களுக்கு, மனித உரிமைகள் மீறப்படாமல் நிறுத்த இதுவொரு நல்ல சந்தர்ப்பமாக அமையும் - என்றார். (ஏ-14-27)

# மன்னார் பிரதேச கலாசாரப் பெருவிழா


மன்னார், டிசெ. 12

வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவலகங்களின் திணைக்களத்தின் அனுசரணையுடன் மன்னார் பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் பிரதேச கலாசாரப் பெருவிழா, மன்னார் நகரசபை மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஏ-14-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 சதவீத குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துக் குறைபாடு!

கொழும்பு, டிசெ.12
இலங்கையில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 50 வீதமானோர் ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் உள்ளனர் என்று பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான உபகுழு தெரிவித்துள்ளது.



பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகியகால மற்றும் நடுத்தரகால நிகழ்ச்சித் திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசியப் பேரவையின் உப குழு, நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் அண்மையில் கூடியது.
அண்மையில் வெளியிடப்பட்ட குடும்பநல பணியகத்தின் தகவல்களுக்கு அமைய, கர்ப்பிணித் தாய்மார்களின் உடல்நிறை குறியீட்டெண் வெகுவாகக் குறைந்துள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் குடும்ப சுகாதாரப் பணியாளர்கள் மட்டத்தில் முன்னுரிமைகள் இனங்காணப்பட்டு, இது தொடர்பான தீர்வுகள் காணப்படவேண்டும் எனக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.
அதேவேளை, சுமார் 80 வீதமான பெண்கள் ஆடைத் தொழிற்றுறையில் பணிபுரிவதுடன், இந்தத் தொழிற்றுறையிலுள்ள பலர் வறுமையான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.
உப குழுவின் முதலாவது அறிக்கையில், மின்சாரப் பட்டியலை அடிப்படையாகக்கொண்டு முன்னுரிமைப் பட்டியல் தயாரிப்பது தொடர்பான முன்மொழிவொன்று முன்வைக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். (ஏ-இ)

# கட்டாய ஓய்வால் பாதிப்பு இல்லை!

*பொதுநிர்வாக அமைச்சு தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 12
60 வயதைக் கடந்த அரச உத்தியோகத்தர்களில் பெரும்பாலானோர் எதிர்வரும் 31ஆம் திகதி ஓய்வு பெறவுள்ளபோதும் அதனால் அரச சேவைக்கு பெரும் பாதிப்பு ஏற்படாது என பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.
டிசெம்பர் 31ஆம் திகதிக்குப் பின்னர் 60 வயதை எட்டிய அரச ஊழியர்கள் ஓய்வுபெறுவதால் அரசாங்கப் பணியில் வீழ்ச்சியடையும் என பெரும்பாலான அரச தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.
இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே, பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்னே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
வருடாந்தம் சராசரியாக 18 ஆயிரம் அரச ஊழியர்கள் ஓய்வுபெறுகின்றனர். இந்த ஆண்டு மட்டும் சுமார் 25 ஆயிரம் அரச ஊழியர்கள் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி ஓய்வுபெறவுள்ளனர்.
அரச சேவையின் செயற்பாட்டுக்கு இது கடுமையான பாதிப்பை ஏற்படுத்தாது. ஏறக்குறைய ஒவ்வொரு வருடமும், அரச சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, பயிற்சி முடித்தவர்களும் அரச சேவையில் இணைகின்றனர். ஆயினும் சில பதவிகளிலுள்ள வெற்றிடங்களுக்கு குறைந்த தரத்திலான தகுதி வாய்ந்த அதிகாரிகளும் நியமிக்கப்பட நேரிடலாம் - என்றார். (ஏ-இ)

## முன்னாள் உபவேந்தர் மீது தாக்குதல்

கொழும்பு, டிசெ.12
பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரான பேராசிரியர் அதுல சேனாரத்னவின் இல்லத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 10 மணியளவில் 300க்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், பேராசிரியர் மீதும் அவரது மகன் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
பல்கலைக்கழக மைதானத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் இரு மோட்டார் சைக்கிள்கள் விபத்தில் சிக்கியதுடன், விபத்துக்குக் காரணமான முன்னாள் துணை வேந்தரின் மகன் செலுத்திச் சென்ற கார் அங்கிருந்து தப்பிச் சென்றது என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அதையடுத்தே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
சம்பவம் தொடர்பில் தகவலறிந்த பேராதனைப் பொலிஸார் மாணவர்களைக் கலைத்துவிட்டு, பேராசிரியரை பொலிஸ் பாதுகாப்பில் மீட்டுச் சென்றுள்ளனர்.
இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பேராசிரியர் பேராதனை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரது மகனும் தாக்குதலுக்குள்ளான நிலையில் கண்டி தேசிய மருத்துவமனையில் பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெறுகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஏ-இ)

# பெரமுன ஆதரவில் சரிவு தேர்தலை பின்தள்ள சதி!

கொழும்பு, டிச.12
முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன மற்றும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் கடந்தவாரம் விசேட கலந்துரையாடல் ஒன்று நடந்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்தக் கலந்துரையாடலில் தேர்தலை ஒருவருடத்துக்கு ஒத்திவைப்பது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. தேர்தல் தொடர்பில் சட்ட ஆலோசனையைப் பெறுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.
எல்லை நிர்ணய சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் கொண்டுவருவதன்மூலம் தேர்தலை அதிகபட்சமாக 6 மாதங்களுக்கு ஒத்திவைக்க முடியுமென சட்ட ஆலோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும்தகவல் வெளியாகியுள்ளது.
அண்மையில் கிடைத்த புலனாய்வு அறிக்கைகளின்படி, தேர்தலை ஒத்திவைக்கவேண்டுமென்ற நிலைப்பாட்டில் தற்போது பசில் ராஜபக்ச உள்ளார் என்று தெரியவந்துள்ளது. இதுதொடர்பில் பசில் ராஜபக்ச நடத்திய இரகசிய கருத்துக்கணிப்பில் சமகி ஜன பலவேக முதலிடத்திலும், ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு இரண்டாவது இடத்திலும், மொட்டுக் கட்சி மூன்றாவது இடத்திலும் இருந்துள்ளன.
பத்தரமுல்ல கட்சி அலுவலகத்தில் உள்ள பசிலின் அறையில் கருத்துக் கணிப்பு அடங்கிய ஆவணமொன்று இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது என்றும் சிங்கள மொழி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஏ-இ)

## மின்சார நுகர்வு 12 வீதம் வீழ்ச்சி

கொழும்பு, டிசெ.12
இந்த வருடம் நாட்டின் மின்சார நுகர்வு 12 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என்று இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
ஹற்றன் பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க இந்தத் தகவலைத் தெரிவித்தார். அடுத்தவருடம் வறட்சி ஏற்படுமென இலங்கை மின்சாரசபை கூறுவதில் எந்தவித அடிப்படையும் இல்லை. கடந்த காலங்களில் மின்சார விநியோகத் தடை மற்றும் கட்டண அதிகரிப்பு என்பன காரணமாக நுகர்வு குறைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஏ-இ)

## சுகாதார அபாயப் பகுதியாக மன்னார்

கொழும்பு, டிசெ.12
இலங்கையில் காற்றின் தரச்சுட்டெண் நேற்றுமுன்தினம் காலையுடன் ஒப்பிடுகையில் நேற்றுக்காலை நல்லதொரு போக்கைக் காட்டுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் இணையத்தளத்தின் தகவல்படி, கடுமையான சுகாதார அபாயமுள்ள பகுதியாக மன்னார் நகரப்பகுதி அறிவிக்கப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் பிற்பகல் 53 என மதிப்பிடப்பட்ட மன்னாரின் காற்று தரச் சுட்டெண் நேற்று 59 ஆக உயர்ந்துள்ளது.
கேகாலை மாவட்டத்தின் காற்று தரச் சுட்டெண் 22 ஆகவும், கொழும்பு மாவட்டத்தின் தரச் சுட்டெண் 42 ஆகவும் காணப்பட்டது.
யாழ்ப்பாணத்தின் காற்று தரச் சுட்டெண் 44 என்ற அளவைக் காட்டுகிறது. அது சாதாரண நிலைமையாகவே கருதப்படுகின்றது. (ஏ-இ)

## பதவியைப் பறித்த செல்பி

கொழும்பு, டிசெ.12
அண்மையில் அலரிமாளிகையில் ஜனாதிபதியுடன் செல்பி எடுத்த ஜனாதிபதி ஊடகப்பிரிவின் பிரதிநிதி ஒருவர் பதவி விலகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
ஜனாதிபதியுடன் இடம்பெற்ற விருந்தில் இந்தநபர் வந்து செல்பி எடுத்து தனது பேஸ்புக் கணக்கில் பதிவிட்டார் என்று கூறப்படுகின்றது.
இதுதொடர்பாக அமைச்சர்கள் முறைப்பாடு அளித்ததை அடுத்து அந்தநபர் ஒளிப்படத்தை பேஸ்புக்கில் இருந்து நீக்கியிருந்தார்.
ஆயினும் கிடைத்த முறைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு அந்த நபர் ஜனாதிபதி ஊடகப் பிரிவில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு திருட்டுக்கள்; சந்தேகநபர்கள் இருவர் கைது!

## பெறுமதியான பொருள்கள் மீட்பு



கிளிநொச்சி, டிசெ. 12

தருமபுரம், புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பல திருட்டுகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர். இதன்போது புதுக்குடியிருப்பு- உடையார்கட்டுப்பகுதி மற்றும் விசுவமடு, புன்னைநீராவி ஆகிய பகுதிகளில் திருடப்பட்ட 4 தொலைக்காட்சிப்பெட்டிகள், மடிக்கணினி, அலைபேசி, 3 மோட்டர்கள் என்பனவற்றுடன் 10 லீற்றர் கசிப்பு ஆகியன சந்தேக நபர்களிடமிருந்து பொலிஸார் கைப்பற்றினர். மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் இருவரையும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் திருடப்பட்ட பொருள்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. பொருள்களின் உரிமையாளர்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தைத் தொடர்புகொண்டு உரிய ஆதாரங்களைக் காண்பித்து பொருள்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்துள்ளார். (எ-14,113)



# மோ. சைக்கிள் திருட்டு சந்தேகநபர் கைது

கிளிநொச்சி, டிசெ. 12

கரைச்சிப் பிரதேச சுகாதாரப் பிரிவு அலுவலகத்தில் மோட்டார் சைக்கிள் திருடிய குற்றச்சாட்டில் சந்தேக நபர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டார் என்று கிளிநொச்சி மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கரைச்சிப் பிரதேச சுகாதாரப் பிரிவின் அலுவலகத்தில் உள்ள மோட்டார் சைக்கிள் ஒன்று கடந்த மாதம் 16 ஆம் திகதி இரவு திருடப்பட்டது என்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய கிளிநொச்சி மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணையில், பரந்தன் மூன்றாம் ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் மோட்டார் சைக்கிள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அது மீட்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளைத் திருடிய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று கிளிநொச்சி மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (எ-14,113)

# சைக்கிள் கடை உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ.12

அச்சுவேலிமேற்கு, தென்மலை பகுதியிலுள்ள சைக்கிள் திருத்தும் கடையொன்று உடைக்கப்பட்டுப் பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

உரிமையாளர் காலையில் கடையைத் திறந்து பார்த்தபோதே அங்கிருந்த பெறுமதியான ரயர்கள் மற்றும் பணம் ஆகியவை திருடப்பட்டமை கண்டறியப்பட்ட நிலையில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

திருட்டு தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-23)

# எரிவாயு சிலிண்டர் திருட்டு; சந்தேகநபர்களுக்கு மறியல்!

யாழ்ப்பாணம், டிசெ. 12

திருநெல்வேலிப் பகுதியிலுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் விடுதிக்குள் நுழைந்து எரிவாயு சிலிண்டர்களைத் திருடிய குற்றச்சாட்டில் கைதான சந்தேகநபர்கள் இருவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல்கலை மாணவர்களின் விடுதிக்குள் நுழைந்து எரிவாயு சிலிண்டர் திருடப்பட்டது என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை மேற்கொண்டிருந்த பொலிஸார், அரியாலை மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளைச் சேர்ந்த 23 மற்றும் 24 வயதுடைய இரண்டு சந்தேகநபர்களைக் கைதுசெய்தனர். சந்தேகநபர்கள் இருவரையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்படுத்தியபோது, சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா உத்தரவிட்டார். (எ-14,23)

# 4 1/2 லீற்றர் கசிப்பு: சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.12

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈவினைப் பகுதியில் நான்கரை லீற்றர் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபரிடமிருந்து ஒன்றரை லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது என்றும், கைது செய்யப்பட்ட சந்தேநபர் 52 வயதானவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ய-27)

# அச்சுவேலியில் மோட்டர் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 12

அச்சுவேலி- இராச வீதிப் பகுதியிலுள்ள வீடொன்றில் தண்ணீர் இறைக்கும் மோட்டர் திருடப்பட்டுள்ளது என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டின் உரிமையாளர் கனடாவில் வசித்து வரும் நிலையில் அவரது உறவினர்கள் வீட்டைப் பராமரித்து வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் காலை வீட்டில் நீர் இறைப்பதற்கு முற்பட்டவேளை, மோட்டர் இயந்திரம் திருடப்பட்டமை தெரியவந்தது.

இது தொடர்பில் வீட்டின் உரிமையாளரின் உறவினர்களால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-14,23)




# பொலிஸ் பிடியில் தப்பித்த திருட்டுச் சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். கிளிநொச்சி -பரந்தனில் மோட்டார் சைக்கிள் திருடியமை, கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பகுதி வீதியில் பயணித்த யாழ்.மாநகர சபை ஊழியரின் சங்கிலி அறுத்தமை, அதே தினம் மேலும் ஒருவரின் சங்கிலி அறுத்தமை, இளவாலைப் பகுதியில் இரண்டு வீடுகளை உடைத்து பொருள்கள் திருடியமை போன்ற பல திருட்டுச் சம்பவங்களுடன் சந்தேகநபர் தொடர்புபட்டிருந்தார்.

அவர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும் மருத்துவமனையில் யாழ்ப்பாண சிறைச்சாலை உத்தியோகத்தரின் பிடியிலிருந்த சந்தேநபர் கடந்த 26 ஆம் திகதி தப்பித்துச் சென்றிருந்தார். இந்த நிலையிலேயே இளவாலைப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய குறித்த சந்தேகநபர் நேற்று முன்தினம் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து திருடப்பட்ட மோட்டார் சைக்கிள், நகைகள், பெருமளவு பணம் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டன. மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் என்று கோப்பாய் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (எ-14,125, 27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



### பிள்ளையார் கதை

சங்கரனார் புதல்வோனே ஐங்கரனே கணநாதா
மங்கல வாழ்வெமக்கு அருளையா- மலையுதித்த
மங்கையுமை பாலகனே மாலவனின் மருகோனே
எங்களையும் ஒருவிழியால் பார்

-முருகு

### நாட்டில் 10 இல் 8 குடும்பங்கள்

# சொத்துக்களை விற்று உணவைப் பெறுகின்றன

கொழும்பு, டிசெ. 12

இலங்கையில் பத்தில் எட்டுக் குடும்பங்கள் தமது பெறுமதியான சொத்துக்களை விற்று வாழ்வாதாரத்தை சமாளிப்பதற்கான மூலோபாயங்களில் ஈடுபடுகின்றன. இந்தத் தரவு கடந்த ஜூன் மாதத்துக்குப் பின்னர் மேலும் அதிகரித்துள்ளது.

இலங்கையிலுள்ள குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பு நிலை குறித்து கடந்த ஒக்ரோபர் மாதம் மேற்கொண்ட ஆய்வில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளது என உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

அந்த ஆய்வறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இலங்கை மத்திய வங்கியின் வரலாற்றில் மிக மோசமான நாணய வீழ்ச்சியைச் சந்தித்துள்ளதால் இலங்கை மக்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இலங்கையில் பொருளாதார நெருக்கடியின் பின்னர் பத்தில் மூன்று குடும்பங்கள் உணவுப்பாதுகாப்பற்ற நிலையில் உள்ளன. பத்தில் ஏழு குடும்பங்கள் விரும்பப்படும் உணவை மிகவும் குறைவாக உண்ணுதல் போன்ற மூலோபாயங்களைப் பின்பற்றுகின்றன. - என்றுள்ளது.

(ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** தேவைக்கேற்ப வருவாய் வந்து சேரும். அலைச்சல் அதிகரிக்கும். புதிய முயற்சி பலன் தரும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் எதிர்பார்த்த படியே இருக்கும்.

**இடபம்:** பிரிந்தவர்கள் ஒன்று சேருவார்கள். மாலையில் உங்கள் எண்ணம் பூர்த்தியாகும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் கூடுதலாகக் கிடைப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள்.

**மிதுனம்:** குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை சரியாகும். குழப்பம் விலகும். பிள்ளைகளை அனுசரித்துச் செல்லவும். மனதுக்கு மகிழ்ச்சி உண்டாகும். சோர்வு நீங்கி உற்சாகம் பெறுவீர்கள்.

**கடகம்:** செயல் இழுபறியாகும். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சலும் சோர்வும் ஏற்படும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். நண்பர்கள் மூலம் கிடைக்கும் செய்தி மகிழ்ச்சி தருவதாக இருக்கும். புதிய முயற்சி சாதகமாக முடியும். மனஸ்தாபம் ஏற்படும்.

**கன்னி:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். திடீர் செலவுகளை சந்திப்பீர்கள். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். லாபமும் சுமாராகத்தான் இருக்கும்.

**துலாம்:** வியாபாரத்தில் ஏற்பட்ட போட்டியை சமாளிப்பீர். உங்கள் எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பல முறை யோசித்து எடுப்பது நல்லது.

**விருச்சிகம்** முயற்சியில் நன்மை காண்பீர்கள். கொடுக்கல் –வாங்கலில் பிரச்சினை. முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். பேச்சு சாதகமாகும்.

**தனுசு:** உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். அதன்பின் சங்கடம் ஏற்படும். கொடுத்த கடன் திரும்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. நண்பர்களைத் தொடர்பு கொண்டு பேசி மகிழ்வீர்கள்.

**மகரம்:** பிரச்சினைகள் விலகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொறுமை அவசியம். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக வெளியில் அலையவேண்டி வரும்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் நாள். கருத்து வேறுபாடுகள் நீங்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.


# மரண அறிவித்தல்



## தெய்வேந்திரம் அன்னலெட்சுமி

பெரியவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் கலாசாலை வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் அன்னலெட்சுமி நேற்று (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துச்சாமி - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், தெய்வேந்திரத்தின் (இந்திரன்) அன்பு மனைவியும், உமாசுதன் (ஆசிரியர், மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்), தனேந்திரா (இலத்திரனியல் உபகரண திருத்துனர்), மணிவண்ணன் (உரிமையாளர் Tastra PVT LTD ) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மஞ்சுளா, கலைச்செல்வி, சுதர்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும், அஸ்விதா, சஞ்சயன், லாவண்யா, யகிர்த்தன், கவின், அபிஷேக், அச்சனா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், இராசலெட்சுமி, கணேசரத்தினம், விசயரத்தினம், வேலாயுதம் பிள்ளை, நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் செல்வரத்தினம், விக்கினராசா, விநாயகமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2022) திங்கட்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தெ.மணிவண்ணன்.
077 978 9223, 021 205 2200

தகவல்
குடும்பத்தினர்

(CS 22195 ) (3/6)



## போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம். வாகன சுத்திகரிப்புச் சேவைகளிற்கான கேள்வி விலை கோரல் - 2023

01. யாழ் போதனா வைத்தியசாலை பெறுகைக்குழுவின் தலைவரினால் 2023ம் வருடத்திற்கான யாழ். போதனா வைத்தியசாலை வாகனங்களிற்கு சுத்திகரிப்புச் சேவையினை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. கேள்வி மனுதாரர் வாகன சுத்திகரிப்புச் சேவைக்குரிய வியாபார அனுமதிப் பத்திரத்தின் பிரதியுடன், கேள்வி ஆவணக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 1000.00 ஐ யாழ். போதனா வைத்தியசாலை அலுவலகக் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும், தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்து கேள்வி விண்ணப்பங்களை 12.12.2022 முதல் 26.12.2022 வரை மு.ப. 9.00 – பி.ப 3.00 மணிவரை யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியசாலைச் செயலாளர் அறையில் பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்வி விண்ணப்பங்களின் மூலப்பிரதியினை தயார் செய்து தபாலுறையிலிட்டு முத்திரை பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் "வாகன சுத்திகரிப்புச் சேவைகளிற்கான கேள்வி விலை கோரல் - 2023" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

04. பூரணப்படுத்திய கேள்வி ஆவணங்களை 27.12.2022 திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ கிடைக்கச் செய்தல் வேண்டும்.

05. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே அவை அவ்விடத்திலேயே திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாக பிரிவில் இலவசமாக பார்வையிடலாம்.

07. அரசாங்க ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களுக்கு கேள்வி ஆவணங்கள் வழங்கப்படமாட்டாது.

08. குறித்த கேள்வியை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவைச் சார்ந்தது.

09. மேலதிக விபரங்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியசாலைச் செயலாளரை 021 222 7764 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(CR 38707) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 140 ஆவது பிறந்த தின நிகழ்வு, யாழ். அரசடி வீதியில் அமைந்துள்ள மகாகவி பாரதியாரின் நினைவுத் தூபியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் கலந்துகொண்டு பாரதியாரின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து விழாவை ஆரம்பித்து வைத்தார். (எ-14-27)



சுப்பிரமணிய பாரதியாரின் 140ஆவது பிறந்த தின நிகழ்வு யாழ். வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. மகாகவியின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி மதிப்பளிக்கப்பட்டது. (ய-27)



கொடிகாமம் - மறவன்புலோ ஐயப்ப தேவஸ்தானத்தில் மணவாளக் கோல அலங்கார உருத்திர கலசகும்பாபிஷேக 12ஆம் நாள் நிறைவு பெருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. (ய-159)



பளை மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் 'பொற்கால நாயகன்' அமரர் அ.பொ.செல்லையாவின் உருவச்சிலை திரைநீக்கமும் நூல் வெளியீடும் பாடசாலை அதிபர் உதயகுமார் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது. பாடசாலையின் பழைய மாணவர்களின் நிதிப்பங்களில் அமைக்கப்பட்ட உருவச் சிலையை தொழிலதிபர் வேலணை நா.வீரசிங்கம் திறந்து வைத்தார். நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச)



யாழ்ப்பாணம், வடமராட்சிகிழக்கு - கட்டைக் காட்டு பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை குருதிக் கொடை நிகழ்வு நடைபெற்றது. சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் புனித கப்பலேந்தியமாதா ஆலய இளையோர் ஒருங்கிணைந்து குறித்த இரத்ததான நிகழ்வை நடத்தினர். அதில் இளைஞர்கள், யுவதிகள் எனப் பலரும் கலந்துகொண்டு குருதி வழங்கினர். (எ-27)



ஹெல்த் லங்கா நிறுவனத்தின் நிதியனுசரணையுடன் சங்கானை பிரதேச இளைஞர் சம்மேளனத்தால் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான இளைஞர், யுவதி பயிற்றுவிப்பாளர்களை உருவாக்கும் பயிற்சி நெறி வலிகாமம் மேற்கு பிரதேசசபையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ய-125)




யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுகூட்டமும் கல்லூரியில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கான பிரியாவிடை நிகழ்வும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் கலாநிதி பிரசாந்தன் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. கல்லூரியில் 25வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்களான என்.வி. ஜெயக்குமார், ரி.கணேசமூர்த்தி ஆகியோருக்கு யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் மதிப்பளிப்பு செய்யப்பட்டு பிரியாவிடை நிகழ்வும் முன்னெடுக்கப்பட்டது.

கல்லூரியின் பழைய மாணவர் தாய்சங்கக் கிளையின் புதிய நிர்வாகத் தெரிவில் தலைவராக கலாநிதி பிரசாந்தன், செயலாளராக கலாநிதி திருவரங்கன், பொருளாளராக சதீஷ் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டதோடு உப தலைவர்களும் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (ய-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 12.11.2022 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் கணபதிப்பிள்ளை இராசையா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 10.12.2022ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (12.12.2022) திங்கட் கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங் களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

தோற்றம் 11.12.1939 — மறைவு 12.11.2022

**கட்டுப்பாளை, கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்:07.03.1957 மறைவு:11.12.2022



### செல்லத்துரை தேவலோகேஸ்வரன் (பபி)

(ஓய்வுபெற்ற காங்கேசன்துறை சீமெந்து நிறுவன ஊழியர்)
பபி-மணிக்கூட்டுக்கடை

60/5, Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தை பிறப்பிட மாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை தேவ லோகேஸ்வரன் நேற்று (11.12.2022) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லத் துரை நாகம்மாவின் கனிஷ்ட புதல்வனும், லாசரு நல்லம் மாவின் அன்பு மருமகனும், விஜயகுல ராணியின் அன்புக் கணவரும், தேவநாயகி, தேவகுணாளன், தேவநங்கை, தேவறாயினி, தேவகௌரி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், புவனேந்திரன் மற்றும் நவரத்தினம், யோகராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2022) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் கந்தரோடை வீதி, சுன்னாகத்தில் அமைந்த அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**செ.தேவகுணாளன்**
**ந.நவசாந்தன்**
**077 2288 246**

## மரண அறிவித்தல்

பிறப்பு 29 . 08 . 1932 — இறப்பு 11 . 12 . 2022



### தம்பையா மகேந்திரன்

**(ஓய்வுபெற்ற உயர்நீதிமன்றப் பதிவாளர்) (High Court Register)**

இரும்புமதவடி, வதிரி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரியடி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா மகேந்திரன் நேற்று (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லப்பா அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் (ஓய்வுபெற்ற உப அதிபர், யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி) பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, பாலேந்திரன், சிவகாமசுந்தரி, இராஜேந்திரன் மற்றும் கமலராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயலக்சுமி (கனடா), துஸ்யந்தினி (ஜேர்மனி), சுரேந்திரன், உமையாள் ஆகியோரின் அன்புத் தந்தையும், லிங்கநேசன் (கனடா), காலஞ்சென்ற சதீஷன் (ஜேர்மனி) மற்றும் சகிலா, ஜெயவரதன் ஆகி யோரின் அன்பு மாமனாரும், சாரா (ஜேர்மனி), தீப்திகா, டிஷானிகா, ஓவியா, புகழவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2022) திங்கட்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முழங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 38735) 1/6

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் . 22 . 02 . 1939 — ஆனைமுகன் அடியில் . 11 . 12 . 2022



### சாரதாம்பாள் மகேஸ்வரசர்மா

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வதிவிடமாகவும் கொண்ட சாரதாம்பாள் மகேஸ்வரசர்மா நேற்று (11.12.2022) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் முன்னாள் ஆதீன கர்த்தாக்களில் ஒருவராகிய அமரர் மகேஸ்வர சர்மாவின் அன்பு மனைவியும், மல்லிகாராணி, காலஞ்சென்ற மாலதி மற்றும் மகேந்திரசர்மா ஆகியோரின் பாசமிகு தாயாரும், வரலக்ஷ்மி அம்மா, மயிலிட்டியை சேர்ந்த காலஞ்சென்ற பத்மநாதக் குருக்கள் ஆகியோரின் அன்பு மாமியும், லக்ஷ்மிநாராயணசர்மா, சஞ்சுத சர்மா, வைத்தீஸ்வரசர்மா, சர்வேஸ்வரசர்மா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பன்னாலை கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வரத்தலம் கற்பக விநாயகர் கோவிலடி,**
**பன்னாலை, தெல்லிப்பளை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 821 3149**

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 - 08 - 1941 — மறைவு 11 - 12 - 2022



### சிவகுரு கதிரவேலு (ராசுமாமா)

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மத்தி காளி கோவிலடியை வசிப் பிடமாகவும் கொண்ட சிவகுரு கதிரவேலு நேற்று (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு சிவபாக்கியம் தம்பதி களின் அன்பு மருமகனும் புஸ்பலீலாவின் அன்புக்கணவரும், விேனாஜினி, சிவாகரன், றோஜினி, துகிர்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நந்தகுமார், துஸ்யந்தினி, ஜெயக்குமார், தர்சனா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நடராசா, செல்லத்துரை (ஆசிரியர்) மற்றும் தங்கரத்தினம், தெய்வானைப்பிள்ளை, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தங்கவடிவேல் மற்றும் இந்திராணி, ரஞ்சிதமலர், லோகேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், திரிசன், கரிசன், லபிசா, சதுர்த்திகா, சஞ்சுதன், அபினன், ராகவி, ராகவன், றக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**காளிகோவிலடி,**
**ஏழாலை மத்தி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 48053 ) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பால்நிலை வன்முறைக்கு எதிரான செயற்றிட்டத்தின் நிறைவு நிகழ்வு

யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில், பால்நிலை வன்முறைக்கு எதிரான 16நாள் செயற்றிட்டத்தின் நிறைவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண பொதுநூலக கேட்போர் கூடத்தில் விசேட நிகழ்வொன்று நேற்றுமுன் தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் நடத்தப்பட்ட பால்நிலை வன்முறைக்கு எதிரான தீர்வுகள் தொடர்பான ஆசிரியர்களுக்கான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசல்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன், மாற்றம் என்பது முதலில் தனி மனிதனில் இருந்து ஏற்பட வேண்டும். குடும்ப உறவுகள் சீராக பேணப்படுகின்ற நிலையில் சமூக கட்டமைப்புக்களில் பிறழ்வுகள் ஏற்படாது என்றும் தெரிவித்தார். (எ-14-20)

## வற்வரி சட்டம் நிறைவேற்றம்!

சேர்பெறுமதி (வற்) வரி (திருத்தச்) சட்டம் மற்றும் உண்ணாட்டர சிறை (திருத்தச்) சட்டம் என்பன திருத்தங்களுடன் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

இந்தச் சட்ட வரைவுகள் தொடர்பான விவாதம் நேற்றுமுன்தினம் காலை முதல் நடைபெற்றது. சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டவரைவின் இரண்டாவது மதிப்பீடு மீது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சியினர் கோரியிருந்தனர். இதற்கமைய நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் சட்ட வரைவுக்கு ஆதரவாக 82 வாக்குகளும், எதிராக 52 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இந்தச் சட்டவரைவின் மூன்றாவது மதிப்பீடு மீதும் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனக் கோரப்பட்டது. இதற்கமைய நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஆதரவாக 82 வாக்குகளும், எதிராக 41வாக்குகளும் அளிக்கப்பட்டன. அதேநேரம், எதிர்க்கட்சியினரின் கோரிக்கைக்கு அமைய உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டவரைவின் இரண்டாவது மதிப்பீடு மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஆதரவாக 83 வாக்குகளும், எதிராக 41 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இந்தச் சட்டவரைவின் மூன்றாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பில் இதற்கு ஆதரவாக 79 வாக்குகளும், எதிராக 36 வாக்குகளும் அளிக்கப்பட்டன. (எ-இ)

### புலமைப்பரிசில் பரீட்சை

## பிரத்தியேக வகுப்புகள் நடத்துவதற்குத் தடை!

கொழும்பு, டிசெ. 12

புலமைப்பரிசில் பரீட்சைக்கான பிரத்தியேக வகுப்புகளை நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சை நிறைவடையும்வரை இந்தத் தடை நடைமுறையில் இருக்கும்.

அதன்படி பரீட்சையுடன் தொடர்புடைய வகுப்புகள், பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகளை நடத்துவதற்குத் தடை விதிக்கப்படுகிறது.

அத்துடன் பரீட்சையில் வரக்கூடிய வினாக்கள் அல்லது மாதிரி வினாக்கள், பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள் ஆகியவை இலத்திரனியல் ஊடகங்கள் அல்லது சமூக ஊடகங்கள் ஊடாக விளம்பரப்படுத்துவதும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (ச-இ)

## கூட்டுறவுச்சங்கக் கிளைகளில் ம.எண்ணெய்

யாழிலுள்ள சில கூட்டுறவுச்சங்கங்கள் தமது கிளை நிலையங்கள் ஊடாக குடும்ப அட்டைக்கு மண்ணெண்ணெய் வழங்கி வருகின்றன.

அதைவிட எரிபொருள் நிலையங்கள் ஊடாகவும் குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுகின்றது. அத்துடன் விவசாய அட்டைகளுக்கும் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது. (ம-14-17)

### தமிழர்...

இந்தச் செயலகத்துக்கான வரைவு தயாரிக்கும் பணிகள் உள்ளிட்ட பூர்வாங்க விடயங்கள் விரைந்து ஆரம்பிப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சர்வகட்சிக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ள பின்னணியில், தமிழ்த் தேசியக் கட்சிகள், அமைப்புக்கள், புத்திஜீவிகள், செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் என்போருடனான சந்திப்பை நேற்றையதினம் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது. யாழ்ப்பாணம், நாச்சிமார்கோவிலடி சரஸ்வதி மண்டபத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் மாவை.சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சார்பில் அருந்தவபாலன், சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சார்பில் பொ.ஐங்கரநேசன், புளொட் அமைப்பின் சார்பில் பா.கஜதீபன் மற்றும் புத்திஜீவிகள், அரசியல் ஆய்வாளர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பல தரப்பினரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். ரெலோ, தமிழ்த் தேசிய முன்னணி ஆகிய கட்சிகள் இந்தச்சந்திப்பில் பங்கேற்கவில்லை.

மேற்படி கலந்துரையாடலின்போதே தமிழர்களின் அரசியல் மற்றும் இதர விடயங்களைக் கையாள்வதற்காக தனியான செயலகத்தை அமைப்பதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

தென்னிலங்கை ஆட்சியாளர்கள் தமிழர்களுக்கான இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் அரசியல் கட்சிகளுடனும் மட்டுமே பேசுகின்றனர். இந்தத் தமிழ்ப் பிரதிநிதிகள் அரசியலில் இருந்து ஓய்வு பெற்றாலோ அல்லது அவர்களின் அரசியல் இருப்பு இல்லாமற் போனாலோ மேற்படி பேச்சுக்கள் நீர்த்துப்போவதே வாடிக்கையாக இருந்து வருகின்றது.

ஆதலால், தமிழர்களின் அரசியல் விடயங்களையும் இதர முக்கியமான விடயங்களையும் கையாள்வதற்கு தனியான செயலகம் ஒன்று அமைக்கப்படவேண்டும். அந்தச் செயலகம் வெறுமனே அரசியல்ரீதியான சிந்தனைக்கூடமாக மட்டுமல்லாது, பொருளாதாரம், அபிவிருத்தி, பண்பாடு, சமூகம் சார்ந்த செயற்பாடுகளிலும் ஈடுபடும் வகையிலும் உருவாக்கப்படவேண்டும் என்றும் அனைவராலும் வலியுறுத்தப்பட்டது. அதற்கு அமையவே மேற்படி செயலகத்தை அமைப்பது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. (அ-ம)

### இந்திய...

இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

'தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை பற்றி கலந்துரையாடுவதற்காக நாளை 13 ஆம் திகதி சந்திப்பு ஒன்றுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். ஒற்றையாட்சியின் கீழான எந்தவொரு தீர்வும் அர்த்தமுள்ள ஒரு தீர்வாக அமையாது என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

ஏற்கனவே அரசமைப்பில் இருக்கின்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் இருக்கும் ஜனாதிபதி, அதிகாரப் பகிர்வு தொடர்பில் இந்த நாட்டில் நிரந்தர அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றை ஏற்படுத்தும் வகையில் துணிச்சலானதும் சரியானதுமான ஓர் அணுகுமுறையைக் கையாள்வாரா என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லாத நிலையே இருக்கின்றது.

ஆனால், எது எவ்வாறாக இருந்தாலும், பேச்சுகளுக்கான ஒரு முன்னோடியான 13ஆம் திகதி பேச்சில் கலந்துகொள்வதும், இந்தப் பேச்சில் பின்வரும் சில அடிப்படையான விடயங்களை வலியுறுத்துவதும் அவசியம் என்று கருதுகின்றேன்.

1. அர்த்தமுள்ள ஓர் அதிகாரப் பகிர்வுக்கான பேச்சை (ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அல்லது கூட்டு சமஷ்டி என்பதே எமது நிலைப்பாடு) நாம் வரவேற்கின்றோம்.
2. பேச்சுக்காக 3ஆம் தரப்பு மத்தியஸ்தம் அவசியம் என்பதை கடந்தகால வரலாறு உணர்த்துகின்றது.
3. மத்தியஸ்தம் வகிப்பதற்கு இந்தியாவுக்கு அழைப்பு விடுவிக்கப்படவேண்டும்.
4. பேச்சு ஒரு கால வரையறைக்குள் பேசி முடிக்கப்படவேண்டும்.

பேச்சுக்கு முன்னதாக கடினமான நிபந்தனைகளை முன்வைத்து ஜனாதிபதியின் அழைப்பை நாம் கண்மூடித்தனமாக புறக்கணிப்பது பொறுப்புள்ள ஒரு செயலாக அமையாது. அத்தகைய செயற்பாடு எமக்கான சர்வதேச ஆதரவையும் பெற்றுத்தராது. ஆனால், தீர்வு தொடர்பில் ஜனாதிபதி உண்மையான அக்கறையுடன் இருப்பாரானால், இந்திய மத்தியஸ்தத்துடன் பேச்சை ஆரம்பிப்பதற்கு அவர் இணங்கவேண்டும். இதனை நான் 13ஆம் திகதி சந்திப்பில் வலியுறுத்துவேன்.

இந்தப் பேச்சில் ஏனைய எல்லா தமிழ் அரசியல் கட்சிகளும் ஒருமித்து இந்தக் கருத்தை வலியுறுத்தவேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு' - என்றுள்ளது. (அ-ம-22)


## மரண அறிவித்தல்

### அபிமன்னன் லீலாவதி (லீலா)

பிறப்பு 23.04.1940 | இறப்பு 11.12.2022



புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 71. கண்ணாபுரம் கொட்டடி. பொன்னையா வீதி, ஆனைகோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட அபிமனன் லீலாவதி நேற்று (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் லட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அபிமன்னனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வகுமார், நாகேஸ்வரி (பிள்ளை), காலஞ்சென்ற பரமேஸ்வரன் (குயா), காந்தரூபன் (கண்ணன், சுவிஸ்), சிவலிங்கம் (சந்திரன்), ராகினி ஆகியோரின் தாயும், செல்வகுமார், நந்தினி, காலஞ்சென்ற உதய குமார், காலஞ்சென்ற தமயந்தி, மலர்மதி, பூமதி, நித்தியானந்தன் (தும்பி), சுமதி, காலஞ்சென்ற கண்ணதாசன், பிரபு, ஆகியோரின் பெரிய தாயும், காலஞ்சென்ற பூபாலசிங்கம், செங்கமலம் ஆகியோரின் சகோதரியும், நாகலட்சுமி, வசந்தன், சீதாதேவி, சுமதி, சசிகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2022) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் 71, கண்ணாபுரம், கொட்டடி இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ். வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.71, கண்ணாபுரம்,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.
077 154 8980, 077 5834 723

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 22199)1-6


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'செக்ஸ்' தேடலில் இலங்கை முதலிடம்

கொழும்பு, டிசெ. 12

கூகுள் தேடல் தளத்தின் மென்பொருளின்படி, இந்த ஆண்டும் செக்ஸ் என்ற சொல்தேடலில் இலங்கை முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இந்த ஆண்டுக்கான 'கூகுள் ட்ரெண்ட்ஸ்' வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கையில் வடமத்திய மாகாணம் இலங்கையில் முதலிடத்தில் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்கள் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றுள்ளன. சில வருடங்களுக்கு முன்னரும் கூகுள் தேடல் மென்பொருளின்படி 'செக்ஸ்' என்ற வார்த்தை தேடப்படும் நாடுகளில் இலங்கை முதலிடம் பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## அரசியல்...

பெரும்பான்மைக் கட்சிகளின் பங்கேற்புடன் சர்வகட்சிக் கூட்டமாகவும் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணியளவில் நடைபெறவுள்ளது என்று கட்சிகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி மற்றும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி உள்ளிட்ட கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்க வருமாறு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்களக் கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். மேற்படி கூட்டம் சர்வகட்சிக் கூட்டமாகவே நடைபெறவுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகளான எம்.ஏ.சுமந்திரன் (தமிழரசுக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ) மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) ஆகியோர் கடந்த வாரம் மேற்படி கூட்டம் தொடர்பில் தனித்தனியாக ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடினர் என்றும் அறியமுடிகின்றது. (அ-ம-22)

## ஒற்றையாட்சியைக்...

தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒற்றையாட்சியைக் கைவிட்டு சமஷ்டி அடிப்படையில் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளிக்காமல் இந்தக் கலந்துரையாடலுக்கு எமது கட்சி செல்லாது. இந்த முடிவில் நாம் உறுதியாக இருக்கின்றோம் - என்றார். (அ-ம-22)

## ரணிலின்...

யாழ்ப்பாணம், நாச்சிமார்கோவிலடி சரஸ்வதி மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரணில் எங்களை சர்வகட்சிக் கூட்டம் என பட்டம் விட்டு ஏமாற்ற நினைக்கின்றார். இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த சர்வகட்சிக் கூட்டமென்பது வழமையான ஏமாற்றுவேலைதான். ஆனால், நாம் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்படுகின்றோம் என்பதைச் சர்வதேசத்துக்குச் சொல்வதற்காகவேனும் இந்தச் சர்வகட்சிக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்.

தொல்லியல் திணைக்களத்தாலும், வன உயிரிகள் திணைக்களத்தாலும், இதர விடயங்களாலும் தமிழர்களின் தாயகப் பகுதிகள் அபகரிக்கப்படுவது உடன் நிறுத்தப்படவேண்டும். இதுவரை அபகரிக்கப்பட்ட நிலங்கள் மீண்டும் தமிழர்களுக்குக் கையளிக்கப்படவேண்டும்.

அரசமைப்பின் குறிப்பிடப்பட்டுள்ளதன்படியான அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன், மாகாண சபைத் தேர்தலும் உடன் நடத்தப்படவேண்டும். வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வு வழங்க வேண்டும் ஆகிய தீர்மானங்களை தமிழ்த் தேசியக் கட்சிகளின் அண்மைய சந்திப்பின்போது மேற்கொண்டிருந்தோம். இந்த மூன்று தீர்மானங்களும் ஈ.பி.டி.பி. உள்ளிட்ட சகல தமிழ் அரசியல் கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவை. எனவே எல்லாத் தமிழ்க் கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளத்தக்க வியூகத்துடன் இந்த சர்வகட்சிக் கூட்டத்தை தமிழ்மக்களின் சார்பில் அணுகவுள்ளோம் - என்றார். (அ-ம)

## இளைஞருக்கு...

படுகாயமடைந்துள்ளார்.

தனது வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த இளைஞரை இடைமறித்த குடும்பத் தலைவரொருவர் இந்தக் கொலைவெறித் தாக்குதலை நடத்தியுள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு உள்ளானவர் உடனடியாக பளை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கு வழங்கப்பட்ட முதலுதவிச் சிகிச்சைகளின் பின்னர் கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

## தேர்தலை...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று வவுனியா, குடியிருப்பு கலாசார மண்டபத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்றது. அதன்பின் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே சுமந்திரன் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

'தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம்வகிக்கும் கட்சிகள் தனித்தனியாக முகம் கொடுப்பது தொடர்பில் தொழில்நுட்ப ரீதியில் ஆராயப்பட்டுள்ளது. வட்டார ரீதியாக ஒரு வீதமும் அதற்கு மேலதிகமாக விகிதாசார முறையில் இன்னொரு வீதமும் சேர்த்துக் கொள்ளப்படுவது தொடர்பில் சென்றமுறை எமக்கு இருக்கும் அனுபவங்களின் அடிப்படையில் பார்த்து தனித்தனியாகப் போட்டியிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கூடுதலான ஆசனங்கள் கிடைக்குமா? இல்லையா? என்கின்ற தொழில்நுட்ப ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளோம். அது தொடர்பில் நாம் சிந்திப்போம் - என்றார். (அ-ம-22)

## 3 வயதுக்...

குறித்த குழந்தையின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார் என்று பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மதுபோதையில் நேற்றுமுன்தினம் வீட்டுக்குச் சென்ற அவர், தனது குழந்தையைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார். இது தொடர்பில் குழந்தையின் தாயார் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய குழந்தை உடனடியாக மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் பரிசோதனைக்காகச் சேர்க்கப்பட்டது. பரிசோதனையின்போது குழந்தை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்தே குறித்த நபர் (குழந்தையின் தந்தை) கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர் கஞ்சா மற்றும் கசிப்பு போன்ற போதைப்பொருள்களுக்கு அடிமையானவர். அவர் போதைப்பொருள்களைப் பெறுவதற்காகவும் கொள்வனவு செய்வதற்காகவும் தனது மனைவியை பிறருடன் உடலுறவில் ஈடுபடுமாறும் கட்டாயப்படுத்தி வந்துள்ளார் என்றும் முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம-125)

## மீண்டும்...

டாந்த மாநாடு கொழும்பு, பொரளை கெம்பல் மைதானத்தில் நடைபெற்றது. இதன்போதே தலைவர் பதவிக்கு சஜித் பிரேமதாஸ ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். தவிசாளராக சரத் பொன்சேகாவும், பொதுச் செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டாரவும், தேசிய அமைப்பாளராக திஸ்ஸ அத்தநாயக்கவும், பொருளாளராக ஹர்ஷ டி சில்வாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ராஜித சேனாரத்ன சிரேஷ்ட உபதவிசாளராகவும், வடிவேல் சுரேஷ் பிரதிச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். உமா சந்திரா பிரகாஸ்க்கு பிரதி செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டனர். ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சித் தலைவர்களும் மாநாட்டில் பங்கேற்றிருந்தனர். டலஸ் அழகப்பெரும, சந்திர வீரக்கொடி உள்ளிட்ட சுயாதீன அணியினரும் பங்கேற்றனர். (அ-ம-44)

## தென்னிந்தியத்...

அவருக்கான பேராயர் திருநிலைப்படுத்தல் கடந்த சனிக்கிழமை இந்தியாவில் நடைபெற்றது. யாழில் 60க்கும் மேற்பட்ட சபைகளை உடைய தென்னிந்திய திருச்சபையின் ஐந்தாவது ஆயராக இவர் நியமனம் பெற்றுள்ளார். (ம-125)

## உள்ளாட்சித்...

ஐக்கிய மக்கள் சக்தியின் மாநாடு கொழும்பு, பொரளை கெம்பல் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சஜித் இவ்வாறு தெரிவித்தார். அத்துடன், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கிகொள்வதற்கான போராட்டம் தொடரும் எனவும் அவர் கூறினார். இது தொடர்பில் சஜித் பிரேமதாஸ தெரிவித்ததாவது:-

'ஐக்கிய மக்கள் சக்தியின் பயணத்தை ஒடுக்குவதற்கு மாளிகை மட்ட சூழ்ச்சி நடக்கின்றது. திட்டமிட்ட அடிப்படையில் சேறு பூசப்படுகின்றது. எது எப்படி இருந்தாலும் சஜித் பிரேமதாஸ உயிருடன் இருக்கும்வரை, ஐக்கிய மக்கள் சக்தி மீது கைவைப்பதற்கு இடமளிக்கமாட்டேன். அவர்களும் ஒன்றுதான், இவர்களும் ஒன்றுதான் என பெரமுனவின் கூட்டணியுடன் எம்மை ஒப்பிட்டு சிலர் பேசுகின்றனர். அவ்வாறு பேசுபவர்களும் ஒன்றுதான் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி என்பது மாறுபட்ட சக்தியாகும். புத்தாக்க சிந்தனை கொண்ட கட்சியாகும். நாட்டை மீட்கக் கூடிய ஆளுமை எம் வசமே உள்ளது.

மக்கள் போராட்டம் இன்னமும் ஓயவில்லை. நாட்டுக்காகப் போராடியவர்கள் சிறைகளில் உள்ளனர். அவர்களுக்காக நாம் முன்னிலையாவோம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு போராடுவோம். அதற்குப் பதிலாக தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான உரிய சட்டங்கள் கொண்டுவரப்படும். காணாமல் ஆக்கப்பட்ட பிரகித் எக்னெலிகொட, படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்க பற்றி எவரும் கதைப்பதில்லை. அவர்களின் குடும்பங்களுக்கு நிச்சயம் நீதியைப் பெற்றுக் கொடுப்போம். கொள்ளை அடிக்கப்பட்ட பணம் எமது நாட்டுக்கு மீள கொண்டுவரப்படும். விரைவில் உள்ளாட்சிசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. நாட்டு மக்கள் ஒன்றுசேரவேண்டும். ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆணை வழங்க, எமது வெற்றி அலையை ஆரம்பித்து வைக்க வேண்டும்' - என்றார். (அ-ம-44)

## சங்கக்கடைக்கு...

பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையத்துக்கு நேற்றையதினம் விஷமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் விடுமுறை தினமென்பதால் குறித்த கூட்டுறவு விற்பனை நிலையம் பூட்டப்பட்டிருந்துள்ளது. இந்த நிலையில் விற்பனை நிலையத்துக்குள்ளிருந்து சந்தேகத்துக்கு இடமான வகையில் புகை வருவதை அவதானித்தவர்கள் இது தொடர்பில் உடனடியாக தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருக்கு அறிவித்துள்ளனர். இதையடுத்து தீயைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கு கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதிலும், 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்தழிந்தன. இது தொடர்பில் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவிடப்பட்ட கால்நடைகளை அடையாளம் காட்டிப் பெறலாம்

வவுனியா, டிசெ. 12

வவுனியா நகரில் வீதிகளில் கைவிடப்பட்ட கால்நடைகளை உரிய அடையாளங்களைக் காட்டி வவுனியா நகரசபையில் பெற்றுக்கொள்ளமுடியும் என்று நகர சபை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், வீதி விபத்துக்களில் அதிகமான விபத்துக்கள் கைவிடப்பட்ட கால்நடைகளால் ஏற்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டது. கால்நடைகளைக் கட்டுப்படுத்தி விபத்துக்களைத் தடுப்பதற்கு பொலிஸார் மற்றும் நகரசபை ஊழியர்களால் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இலங்கேஸ்வரன் தலைமையில் நகரசபை ஊழியர்கள் பொலிஸாருடன் இணைந்து மூன்றுமுறிப்பு, மன்னார் வீதி, பூந்தோட்டம், ஹொறவப்பொத்தான ஆகிய நகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகளில் கைவிடப்பட்ட நிலையில் வீதிகளில் காணப்பட்ட சுமார் 80க்கும் மேற்பட்ட கால்நடைகளை மீட்டு வவுனியா நகரசபையிடம் ஒப்படைத்தனர்.

இந்த நிலையிலே நகரசபையிலுள்ள கால்நடைகளை உரிமையாளர்கள் அவற்றின் அடையாளங்களை உறுதிப்படுத்தியும் தண்டப்பணத்தைச் செலுத்தியும் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கால்நடைகளைப் பெற்றுக்கொள்ளத் தவறினால் அவற்றை ஏல விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் நகரசபை தெரிவித்துள்ளது.

(எ-14)

# முன்னாள் போராளிகள் நலன்புரிச் சங்க நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.12

முன்னாள் போராளிகள் நலன்புரிச் சங்கச் சந்திப்பு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

"இனத்துக்காக உழைத்தவர்களை இன்னலின்றி வாழ வைப்போம்" எனும் தொனிப் பொருளில் உருவாக்கப்பட்ட போராளிகள் நலன்புரிச் சங்க சந்திப்பு யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது.

சர்வமதத் தலைவர்களின் ஆசியுரையோடு இடம்பெற்ற போராளிகள் நலன்புரிச் சங்க நிகழ்வில் சட்டத்தரணி கே.வி.தவராசா மற்றும் சர்வமதத் தலைவர்கள், வர்த்தகப் பிரதிநிதிகள், முன்னாள் போராளிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

தேசிய சிந்தனையோடு பயணித்த போராட்ட அமைப்புகளின் போராளிகள், விடுதலைக்காக பிற்பட்ட காலங்களிலே சில போராட்ட அமைப்புக்கள் எமது போராட்ட அமைப்போடு ஒரே கொள்கையில் இணைந்து பயணித்தவர்கள் மட்டுமே இதில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

மாற்றுச் சிந்தனையோடு பயணித்த போராட்ட அமைப்புகளின் போராளிகள் நலன்புரிச் சங்கத்தில் இணைத்துக்கொள்ளப்படமாட்டார்கள். எமது சிந்தனைகளுடன் தொடர்ந்து பயணிக்காமல் முடியாமற்போய்விடும் என்பதாலேயே மாற்று சிந்தனையுடையவர்களை இதில் உள்ளடக்க முடியாது - என நிகழ்வில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த போராளி ஈஸ்வரன் தெரிவித்தார்.

(எ-27)

# கட்சி தாவி வருவோருக்கு பதவி வழங்க எதிர்ப்பு

கொழும்பு, டிசெ.12

ஐக்கிய மக்கள் சக்தி அல்லது வேறு எந்தக் கட்சியில் இருந்தும் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் வந்தாலும் பொதுஜன பெரமுனக் கட்சிக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கும்வரை வேறு யாருக்கும் பதவிகள் வழங்க உடன்பாடதிருப்பது என மஹிந்த தரப்பினர் தீர்மானித்துள்ளனர்.

பொதுஜன பெரமுனக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் குழுவொன்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவிடம் தங்கள் முடிவை அறிவித்துள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

தமது கட்சிக்கு 16 அமைச்சுப் பதவிகளும் புதிதாக வழங்கப்படவேண்டுமென்றும், புதியவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படாவிட்டால் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதில் இருந்து விலகுவோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பு நிறைவடைந்தவுடன், அமைச்சரவையை புதிதாக நியமிக்கவேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

இதேவேளை- எதிர்க்கட்சியில் இருந்து வருபவர்களுக்கு பிரதான அமைச்சுப் பதவிகளை வழங்க வேண்டாமென கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பஸில் ராஜபக்சவிடம் தெரிவித்துள்ளனர். இந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

(எ-இ)


## மணமகன் தேவை

1982 இல் பிறந்த ரேவதி நட்சத்திரம் கி.பா 07 அரச தொழில் புரியும் பட்டதாரி மணமகளுக்கு மணமகன் தேவை. (விவாகரத்தானவர்)

(CS 22179) (3/6)

T.P :077 545 2892

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரியிலிருந்து 150 M தூரத்தில் லோட்டன் வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

077 4810 490

## வேலையாட்கள் தேவை

பருத்தித்துறையில் இயங்கும் உள்நாட்டு, வெளிநாட்டு பார்சல் நிறுவனம் மற்றும் பருத்தித்துறை - கொழும்பு போக்குவரத்து சேவை நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

பருத்தித்துறையில் வசிப்பவர் விரும்பத்தக்கது.

0777 66 77 15

## முதலாம் ஆண்டு நினைவு தினம்

பூசை - 12.12.2022

அன்னை மடியில் 01 . 07 . 1940



இறைவன் அடியில் 23 . 11 . 2021

அருள்மிகு வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய மூத்த பிரதம குருவும், ஆதீனகர்த்தாவுமாகிய "ஆகம கிரியா ஜோதி"

**சிவஸ்ரீ சின்னச்சாமிக்குருக்கள் செல்வராசாக்குருக்கள் (காந்திஜயா)**

திதி – அபரபக்க சங்கடஹர சதுர்த்தி

ஆண்டு ஒன்று ஆன போதும் அப்பா உங்கள் நினைவுகள் ஆறவில்லை எம்துயரம் எத்தனை ஆண்டுகள் சென்றிடினும் உங்கள் நினைவுகள் எங்கள் மனதில் நீங்காது நிலைத்திருக்கும் அப்பா உங்கள் ஆத்மா சாந்தி அடைய வீரமாகாளி அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **கோயிலாக்கண்டி பகுதியில் 112 பரப்புக்** காணி விற்பனைக்கு உண்டு.

- **A32** பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- **A32** பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
- ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.

**தரகர் தேவையில்லை**

**பார்வையிடும் நேரம்:-**

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- **ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.